# ஹைக்கூ ஓர் புதிய அறிமுகம்

## 1. ஹைக்கூ ஓர் அனுபவம்

நள்ளிரவில்
தூரத்தில் ஒரு கதவு
இழுத்து சார்த்தப்பட்டது.

மேலே குறித்த மூன்று வரிகளைப் படித்ததும் உங்கள் மனதில் எழுந்த நினைவுகள் என்ன? உடனே பார்க்கும்போது இந்த மூன்று வரிகள் ஒரு நிகழ்ச்சியை விவரிக்கும் வெறும் வரிகள்தாம். ஆனால் சற்றே சிந்திக்கையில் இதன் பரிமாணங்கள் விரிவதை கவனிக்க முடியும். நள்ளிரவு... இந்த வரிகளை எழுதியவன் விழித்திருக்க வேண்டும். அவன் தனிமை வெளிப்படுகிறது. அவனுக்கு ஏன் தூக்கம் வரவில்லை? கவலையா? தனிமையா உடல் நலமில்லையா ஏன் விழித்திருக்கிறான்? எங்கே இவன் விழித்திருக்கிறான். நகரத்திலா... கிராமத்திலா... நகரத்தில் இருக்கமுடியாது அத்தனை நிசப்தம் நகரத்தில் ஏது! எத்தனை நிசப்தம்? தூரத்தில் கதவு சார்த்துவதைக் கேட்க முடியும் சப்தம். அந்த சப்தத்தின் அர்த்தம் என்ன... அந்த வேளைக்கு வீட்டுக்கு வந்தது யார்? ஒரு தகப்பனா ஒரு மனைவியா ஒரு மகனா வயசுக்கு வந்த பெண்ணா...? அல்லது யாராவது கோபத்தில் வீட்டைவிட்டு வெளியே செல்கிறார்களா!

மூன்றே மூன்று வரிகள். அவைகள் ஏற்படுத்தும் சலனங்கள் எத்தனை பாருங்கள். ஒஸாகி ஹோஸாய் என்கிற நவீன ஜப்பானிய கவிஞன் ஹைக்கூ இது.

உங்கள் சிந்தனை என்னும் ஜலப்பரப்பில் எறியப்படும் சிறிய கல் ஹைக்கூ.

நம் தினவாழ்வில் ஆச்சரியகரமான வசீகரமான பரவசமான சோகமான கணங்கள் பலப்பல உள்ளன. காலை நடந்து செல்லும்போது குட்டி நாய் ஒன்று உங்களைப் பார்த்து வாலாட்டுகிறது அல்லது ஜன்னல் வழியாக ஒரு குழந்தை எட்டிப் பார்த்து சிரித்துவிட்டு டாட்டா காட்டுகிறது. பஸ்ஸில் ஒரு கணம் அந்த இளம் பெண் உங்களை அதிகப்படியாக பார்க்கிறாள். முற்றிலும் அன்னியர் ஒருவர் ஓடிவந்து பஸ் கிடைத்த சந்தோஷத்தில் உங்களைப் பார்த்து புன்னகைக்கிறார். திடீர் என்று காய்ந்த சருகுகளை குப்பைத் தொட்டியில் போட்டுக் கொளுத்தும்போது மூக்கில் படரும் வாசனை உங்களுக்குப் பிடித்திருக்கிறது. அலுவலகத்து மாடிப்படியில் ஒருவருடன் மோதாமல் தப்பிக்கிறீர்கள். அல்லது மோதிக் கொண்டு லேசாக நெற்றியில் வலிக்க தடவிக் கொள்கிறீர்கள். இவ்வாறு எத்தனை கணங்கள்! உன்னதக் கணங்கள். சின்ன சின்ன இன்ப துன்பங்கள். நமக்கு இறைவன் பரிசுப் பொருட்கள் போல தினம் தினம் கிடைக்கின்றன.

ஹைக்கூ எழுதுவதும் படிப்பதும் இவ்வகையான கணங்கள் மற்றவருடன் பகிர்ந்து கொள்வதுதான். அனுபவம், உணர்வு இரண்டையும் பிறருக்கு தர முயல்வதுதான் ஹைக்கூ.

சொல்லப்போனால் கலை இலக்கியம் எல்லாவற்றிற்குமே இதுதான் குறிக்கோள். கலைஞனும் கவிஞனும் தமக்கு கிடைத்த அனுபவங்களை வரைந்தோ, எழுதியோ மற்றவர்களுக்குச் சொல்வதுதான்... அந்த அனுபவ வார்ப்புக்கள் சில சமயம் நேரடியாக இருக்கின்றன.